3/12 30

| காலாண்டுத் தேர்வு - 2024 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 3.00 மணி **XII – வரலாறு** | மதிப்பெண் : 90 |

பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20×1=20)
2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதவும்.

1. சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன் எனக் கூறியவர்?
அ) பால கங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) மாக்ஸ்முல்லர் ஈ) பாரதியார்

2. பின்வரும் எது ஒன்று சரியாக பொருந்தியுள்ளது
அ) ஆங்கில கல்வி சட்டம் - 1843
ஆ) அடிமை முறை ஒழிப்பு - 1859
இ) சென்னை வாசிகள் சங்கம் - 1852
ஈ) இண்டிகோ கலகம் - 1835

3. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன் மொழியப்பட்டது
அ) அரவிந்தகோஷ் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) ஃபெரோஸ் ஷா மேத்தா ஈ) லாலா லஜபதிராய்

4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) பக்கிம்சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்
ஆ) பா.சுப்ரமணியம் - பல்கலைக்கழகம் சட்டம், 1904
இ) மிண்டோபிரபு - விடிவெள்ளிக் கழகம்
ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

5. பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன் மோகன் மாளவியா
இ) திலகர் ஈ) பி.பி.வாடியா

6. Indian Unrest என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதி ராய் ஆ) வேலண்டைன் சிரோஸ்
இ) திலகர் ஈ) அன்னிபெசன்ட்

7. அகில இந்திய தொழிற்சங்க காங்ரஸின் முதல் தலைவர் யார்?
அ) பி.பி.வாடியா ஆ) ஜவஹர்லால் நேரு
இ) லாலா லஜபதிராய் ஈ) சி.ஆர்.தாஸ்

8. காந்தியடிகளின் ஆரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C.பானர்ஜி ஈ) M.G.ரானடே

9. இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930
இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

10. காந்தியடிகள் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு
அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச் 6, 1930
இ) ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச் 4, 1930

11. முதலாவது பருத்தி தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1852 ஆ) 1854 இ) 1861 ஈ) 1865

12. கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1855 ஆ) 1866 இ) 1877 ஈ) 1888

13. இரு நாடு கொள்கையை முதல் முதலில் கொண்டு வந்தவர்
அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு
இ) முகமது இக்பால் ஈ) சர் வாசிர்ஹசன்

14. வேவல் பிரபுவிற்குப் பின்னர் பதவியேற்றவர்
அ) லின்லித்தோ ஆ) பெதிக் லாரன்ஸ்
இ) மௌண்ட்பேட்டன் ஈ) செம்ஸ்ஃபோர்டு

15. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின்போது இந்தியாவிற்கு வருகை தந்தது?
அ) வேவல் பிரபு ஆ) லின்லித்தோ பிரபு
இ) மௌண்ட் பேட்டன் பிரபு ஈ) இவர்களில் யாருமில்லை

16. இந்திய தேசிய இராணுவப்படை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு
இ) இராஜாஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

17. ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர்?
அ) பொட்டிஸ்ரீராமுலு ஆ) பட்டாபி சீத்தாராமையா
இ) கே.எம்.பணிக்கர் ஈ) டி.பிரகாசம்

18. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. இந்திய அரசாங்கம் ________ வகையான மேம்பாட்டிற்காக உறுதிபூண்டுள்ளது
அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை

20. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயபிரகாஷ் நாராயணன்
இ) வினோபாபாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா

## பகுதி - 2

**குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.(கட்டாய வினா 30) (7x2=14)**

21. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
22. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவரி.
23. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களை கண்டறிக.
24. கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
25. 'பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா' குறித்து எழுதுக.
26. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?
27. தனித்தொகுதி முறையினை பற்றி எழுதுக.
28. ஆகஸ்ட் கொடையின் சிறப்பை கூறுக.
29. அரசியல் அமைப்பின் ஷரத்து 370ன் முக்கியத்துவம் என்ன?
30. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.

## பகுதி - 3

**குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 40) (7x3=21)**

31. பிரிட்டிஷ் இந்தியாவின் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கினை எழுதுக.
32. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
33. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களைப் பற்றி விவாதிக்கவும்.
34. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
35. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
36. 1927ல் டெல்லியில் நடைபெற்ற முஸ்லீம் லீக் மாநாட்டின் முன்மொழிவுகள் யாவை?
37. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?
38. பஞ்சசீல கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
39. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
40. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.

## பகுதி - 4

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (7x5=35)**

41. அ) பிரிடிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக பொருளாதார காரணங்களை ஆய்க.
*(அல்லது)*
ஆ) திலகர் மற்றும் அன்னிபெசன்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

42. அ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.
*(அல்லது)*
ஆ) 1919-1939ம் ஆண்டுகளுக்கு இடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியைப் பற்றி எழுதுக.

43. அ) இந்திய விடுதலைப்போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.
*(அல்லது)*
ஆ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்க.

44. அ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.
*(அல்லது)*
ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

45. அ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.
*(அல்லது)*
ஆ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளை கண்டறிக.

46. அ) 1920 முதல் 1950 வரை இந்திய விடுதலைப் போராட்டத்தில் நடந்த ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு வரைக. *(அல்லது)*
ஆ) ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துக.

47. ***அ) இந்திய தேசிய இயக்கம் போராட்டத்துடன் தொடர்புடைய கீழ்கண்ட முக்கிய இடங்களை இந்திய வரைபடத்தில்(மேப்) குறிக்க.***
1) நாக்பூர் 2) சென்னை 3) கல்கத்தா 4) வேதாரண்யம் 5) பம்பாய்
*(அல்லது)*
ஆ) ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com